# க.பொ.த(சா/த)

# கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள்

# வரலாறு

# (2016 – 2019)

# பகுதி II


தொகுப்பு :- திரு.நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

# பகுதி I(கட்டாய வினா)

## இலங்கைப்படம் குறித்தல்

### 2016

தெதுறுஓயா, கல்லோயா, இலங்கைத்துறை, சிலாபம், செங்கடகல நகரம், பு'ந்தல, இப்பன்கட்டுவ, ஜோதவாவி, நல்லூர், கலாவாவி, ஊராத்தோட்டை.

### 2017

கிரிந்திஓயா, இரணைமடுக்குளம்,தேவநகரம், சல்வாத்தோட்ட, கந்தரோடை, சொரபொரவாவி, கன்னொருவ, ஸ்ரீ ஜயவர்த்தனபுரக்கோட்டை, கலாஓயா, பெட்ரிக்கோட்டை, பொம்பரிப்பு, காலித்துறைமுகம்

### 2018

கல்ஓயா, யான்ஓயா, பதவியா வாவி, மினிப்பே அணைக்கட்டு, கம்பளை, புத்தளம், ஊராத்தோட்டை, நீர்கொழும்பு, திருக்கேதீஸ்வரம், கலாதீத்த, ஜம்புகோளப்பட்டினம், மினிஹாகல்கந்த

### 2019

தெதுறுஓயா, கும்புக்கன்ஓயா, கல்லோயா நீர்த்தேக்கம், பராக்கிரமபாகு சமுத்திரம், நகதிவ, ஊர்காவற்றுறை, கொடவாய, பண்டுவஸ்நுவர, கோணேஸ்வரம் கோயில், பொல்கொல்ல அணைக்கட்டு, மகாதித்த, கொழும்பு

## உலகப்படம் குறித்தல்

### 2016

சென்னை, பாரசீக விரிகுடா, ஜாவாத்தீவு, இத்தாலி, கலிகட், கொன்ஸ்தாந்திநோபிள்

### 2017

மும்பை, செங்கடல், உரோமாபுரி, மலயா தீபகற்பம், ஜப்பான் தீவுகள், போர்த்துக்கல்

### 2018

வத்திக்கான், பர்மா, கள்ளிக்கோட்டை, பத்தெவியா, ஹிரோசீமா, சுயெஸ்கால்வாய்

### 2019

பாரசீகக்குடா, லிஸ்பன், மலாக்கா நீரிணை, இத்தாலி, கல்கத்தா, சுமாத்திரா தீவு

**சுருக்க வினாக்கள்**

**2016**

மேல்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்குமுறையில் தருக.

A - இந்தியாவிற் கரையிறங்கி தான் உரு கிறிஸ்தவன் என்றும் வாசனைத்திரவியங்களைத் தேடி வந்ததாகவும் குறிப்பிட்டவர்.

B – திரிலோசுந்தரி என்ற கலிங்க இளவரசியைத் திருமணம் செய்த பொலநறுவையின் அரசன்.

C - இலங்கையை ஆட்சி செய்த முதலாவது இலம்பகர்ண அரசன்.

D - இரண்டாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்புடைய பாசி ஆட்சியாளர்.

**2017**

கீழே A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை ஒழுங்குமுறையில் தருக.

A – ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் இந்து சமுத்திரத்தின் வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்திய இனத்தவ்ர.

B – போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு கடற்படைப் பலமுள்ள வெளிநாட்டு இனத்தவரின் உதவியைப் பெற்றுக்கொண்ட மலைநாட்டு மன்னன்.

C – கல்பொத்த கல்வெட்டைச் செதுக்கிய பொலநறுவை ஆட்சியாளர்.

D - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது முதலாவது அணுகுண்டுத்தாக்குதலுக்குட்பட்ட நகரம்.

**2018**

கீழே A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை ஒழுங்குமுறையில் தருக.

A – முதலாம் விஜயபாகு மன்னரின் கூலிப்படையினரின் பெயர்.

B – கி.பி 1498இல் இந்தியாவை அடைந்த போர்த்துக்கேயக் கடலோடி.

C – இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது நேசநாட்டு அணிக்குத் தலைமை தாங்கிய பிரித்தானியப் பிரதமர்.

D - இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானில் ஆட்சி புரிந்த பேரரசன்.

**2019**

கீழே A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை ஒழுங்குமுறையில் தருக.

A – அனுராதபுர இராச்சியத்தின் இறுதி மன்னன்.

B – சீதாவாக்கையின் மன்னனான மாயாதுன்னைக்கு கடற்படை உதவி வழங்கிய கள்ளிக்கோட்டை ஆட்சியாளன்

C – புராதன வர்த்தக நிலையமான கொன்ஸ்தாந்திநோபிள் நகரத்திற்கு தற்போது வழங்கப்படும் பெயர்

D – சுயஸ்கால்வாயை தேசியமயமாக்கிய எகிப்திய ஜனாதிபதி

## பட வினாக்கள்

## 2016

- A.B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

(I) 1 A இனால் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2 எந்தத் தூபியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வராய்ச்சியினால் இது கண்டுபிடிக்கப்பட்டது?

3 இது எந்த உலோகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது?

4 இந்த தொல்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற் பிறந்ததாகக் கருதப்படும் மன்னனின் பெயர் என்ன?



**A**

(ii) 1 B இனால் காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன?

2 இது எந்தச் சமயத்திற்குரியது?

3 இது இலங்கையின் எவ்வரலாற்று நகரத்தில் அமைந்துள்ளது?

4 இது இலங்கையை ஆண்ட எந்த வெளிநாட்டு ஆட்சியாளர்களினால் நிர்மாணிக்கப்பட்டது.



**B**

## 2017

- A.B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

(II) 1 A இனால் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2 இதன் மூலம் ஆற்றப்படும் பணி யாது?

3 இதனை எந்த நீர்ப்பாசனக் கட்டுமானத்தை அண்மியதாகக் காணலாம்?

4 இதனை நிர்மாணுிப்பதற்குப் பயன்படுத்திய பொருட்களிலொன்றைக் குறிப்பிடுக.



**A**

(iii) 1 B இனால் காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயர் என்ன?

2 இது அமைந்துள்ள நகரம் யாது?

3 இதனை யாரைத் தங்கவைப்பதற்காகப் பயன்படுத்தினர்?

4 இத உலகின் எந்தப் புரட்சியுடன் தொடர்புபட்டது?



**B**

## 2018

- A.B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

(II) 1 A இனால் காட்டப்பட்டுள்ள சிற்பத்தின் பெயர் என்ன?

2 இதனைக் காணக்கூடிய புனிதத்தலம் எது?

3 இச்சிற்பத்தில் காணப்படுபவர் யார் என இனங்காணப்பட்டுள்ளார்?

4 இக்கலைப்படைப்பு இலங்கையின் எந்த இராச்சியத்திற்குரியது?



A

(iii) 1 B இனால் காட்டப்பட்டுள்ள சித்திரத்தில் காணப்படுகின்றவரின் பெயரினைக் குறிப்பிடுக

2 இவர் இலங்கையில் எந்த இராச்சியத்தின் ஆட்சியாளராவார்?

3 அரியணை ஏறுவதற்கு முன்னர் இவர் எப்பெயரால் அழைக்கப்பட்டார்?

4 இந்த சித்திரத்தை வரைந்ததாக கருதப்படுகின்றவரைப் பெயரிடுக.



B

## 2019

- A.B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

(II) 1 A இனால் காட்டப்பட்டுள்ள கல்வெட்டைக் குறிக்கும் பெயர் யாது?

2 இதனை ஆக்கிய மன்னனின் பெயர் யாது?

3 இம்மன்னனுக்குரிய அரச வம்சத்தின் பெயர் என்ன?

4 இக்கல்வெட்டு நிறுவப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரம் எது?



A

(iii) 1 B இனால் காட்டப்பட்டுள்ள நபரின் பெயர் யாது?

2 இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது அவர் எந்த நாட்டின் ஆட்சியாளனாக இருந்தார்?

3 இவரின் அரசியல் தத்துவதற்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

4 பகைவர்களை அடக்குவதற்காக அவரால் தாபிக்கப்பட்ட இரகசிய பொலிசாருக்கு வழங்கப்பட்ட பெயரைக் குறிப்பிடுக.



B

## பகுதி II(இலங்கை வரலாறு)

**தரம் 10**

**2016**

01 (i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய மனிதன் வாழ்ந்த சூழலியல் வலயங்கள் மூன்றினைப் பெயரிடுக.

(II) வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற கரையோரத்து திறந்த வாழ்விடங்கள் காணப்பட்ட இரண்டு இடங்களையும் கற்குகை வாழ்விடங்கள் காணப்பட்ட இடங்கள் இரண்டையும் பெயரிடுக.

(III) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் உணவு முறைகள், அவர்கள் வாழ்ந்த பல்வேறு சூழல்களுக்கு அமைய வடிவமைக்கப்பட்டிருந்த விதத்தை இரண்டு உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(IV) ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த ஒருவர் இறந்த பின்னர் பின்பற்றப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் மரணச்சடங்கு முறைகைள இரண்டு காரணங்களின் துணையுடன் விளக்குக?

02 (i ) இலங்கையின் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கமைய A,B,C ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொருவரினதும் பதவிப்பெயரை ஒழுங்குமுறையில் எழுதுக.

A - குடும்பத் தலைவர் B – கிராமத் தலைவர்

C – சில கிராமங்களின் அல்லது குளக்கட்டமைப்பின் தலைவர்

(II) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய மேல்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப்பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து A,B,C,D ஒழுங்குமுறையில் எழுதுக.

A – அமைச்சரவையின் தலைவராகப் பணியாற்றுதல்

B – அரசின் திறைசேரிக்குப் பொறுப்பாக இருத்தல்

C - நகர ஆட்சி தொடர்பில் பணியாற்றுதல்.

D – அரசனின் யானைகள் தொடர்பில் பணியாற்றுதல்

(வெதனா, மஹாமத, படகரிக, சேனபதி, ஹதிஅதெக, நகரகுத்திக, அசஅதெக, பதகு)

(III) நாட்டு மக்கள் அரசனிடமிருந்து எதிர்பார்த்த சேவைகள் இரண்டினை விபரிக்குக.

(IV) வசப மன்னன் இந்நாட்டின் முக்கியமான ஆட்சியாளர்களுள் ஒருவர் என்பதை மூன்று காரணிகளின் துணையுடன் எடுத்துக்காட்டுக.

03 (I) எலஹர கால்வாயின் மூலம் நீர் விநியோகிக்கப்பெறுகின்ற மூன்று குளங்களைப் பெயரிடுக.

(II) கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுடனும் தொடர்புடைய விடையை ஒழுங்குமுறையில் எழுதுக.

A மகியங்கனைக்குத் தெற்கில் மகாவலி கங்கைக்குக் குறுக்காக அமைக்கப்பட்ட அணைக்கட்டு

B கலாவாவியிலிருந்து திசவாவி வரை நீரைக் கொண்டு செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட கால்வாய்

C விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்ற கருத்தைக் கொண்டிருந்த அரசன்

D மழைநீரினால் போஷிக்கப்படுகின்ற சிறிய குளங்களின் கட்டமைப்புக்கு வழங்கப்படும் பெயர்

(III) (a) குளங்களின் முக்கியமான தொழினுட்பக் கூறுகள் இரண்டைப் பெயரிடுக.

(b) நீங்கள் மேலே (a) இல் பெயரிட்ட ஒரு தொழினுட்பக் கூறின் நிர்மாணிப்பு, பயன்பாடுகள் என்பன பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(IV) பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பாரியளவிலான நீர்ப்பாசனத்திட்டங்கள் ஏன் தோன்றவில்லை என்பதனை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக

04 (i) மேல்வரும் A,B,C ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A – ஒரு நகரத்திற்குரிய அனைத்து கூறுகளையும் கொண்ட ஆட்சி நிலையமாக அனுராதபுரத்திற்கு மாற்றியமை.

B – சிகிரியாவை தனது ஆட்சி நிலையமாகத் தெரிவுசெய்தமை.

C - இராசரட்டையை சோழரின் ஆட்சியிலிருந்து மீட்டு, ஆட்சி நிலையமாகத் பொலன்னறுவையை தெரிவுசெய்தமை.

(II) A – வரலாற்று ரீதியான மாயரட்டைக்குரிய இரண்டாவது நகராக்க ஆட்சி நிலையங்கள் இரண்டையும்

B – வரலாற்று ரீதியான மலையரட்டைக்குரிய இரண்ட்ாவது நகராக்க ஆட்சி நிலையங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

(III) இரண்டாவது நகராக்கக் காலத்தில் ஆட்சி நிலையங்களைத் தெரிவுசெய்வது தொடர்பில் செல்வாக்குச் செலுத்திய அடிப்படைக் காரணிகள் இரண்டை விளக்குக?

(IV) ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் சிறந்த ஆட்சியாளனாகக் கருதப்படுவதற்கு ஏதுவான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விவரிக்குக.

05 (i) A – முதல் தடவையாக கண்டியில் சுதந்திரமான இராச்சியத்தை அமைத்த மன்னன்

B – கி.பி 1580இல் மலைநாட்டின் மீது படையெடுத்த சீதாவாக்கையின் ஆட்சியாளன்

C – தோனாகத்தரின என்ற பெயயரில் ஞானஸ்நானம் பெற்ற கரலியத்தபண்டாரவின் மகள்

(II) A – அரச மாளிகையின் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிலம்

B – பௌத்த விகாரைகளின் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட நிலம்

C – பிரதானிகள் செய்த சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்

D – கோயில்களின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட நிலம்

ஆகியன என்ன பெயர்களால் அழைக்கப்பட்டன என்பதை யுஇடீஇஊஇனு ஒழுங்குமுறையில் எழுதுக.

(III) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத்தில் தனது சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பின்பற்றிய நடைமுறைகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக?

(IV) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட படையெடுப்புக்கள் தோல்வியடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக?

**2017**

06 (I) இலங்கையில் தென்மாகாணத்திற்குரிய குறைவறள் வலயத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கல்லாயுதங்கள் கிடைக்கப்பெற்று இடங்கள் மூன்றைப் பெயரிடுக.

(II) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கை முறையின் முக்கியமான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

(III) a) முன்வரலாற்றுக்காலம் எனக் கருதப்படுவது எக்காலப்பகுதியாகும்?

b) இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்திற்குரிய மயானங்கள் அமைந்துள்ள இடங்கள் மூன்றைக் குறிப்பிடுக?

(IV) முன் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மனிதனின் தொழினுட்பத்தைப் பயன்படுத்திய விதத்தை மூன்று காரணிகளை முன்வைத்து விளக்குக.

07 (i) இலங்கையின் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட நிருவாகத்திற்குரித்தான பின்வரும் பண்புகளையும் இப்பண்புகளுடன் தொடர்புடைய நபர்களின் உத்தியோகபூர்வப் பெயர்களையும் அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A – காசு அச்சிடும் பிரிவின் தலைவர் B – குதிரைப் பிரிவின் தலைவர்

C – வர்த்தக நடவடிக்கைகளுக்கான தலைவர்

( ரூப அதெக, பன அதெக, நகர வடிக, நட்ட அதெக, அச அதெக)

(II) பின்வரும் விடயங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடைய ஆட்சியாளர்கள் யார் என்பதை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A – தனது மாமான்மாரை வென்று அரச பதவியைக் கைப்பற்றுதல்.

B - இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக ஒழுங்கமைக்கப்பட்ட யுத்தத்தில் வெற்றிபெற்று ஐக்கிய இலங்கையை உருவாக்குதவ்

C – அதழகளவு குளங்களை நிர்மாணித்தலில் முன்னிலை வகித்தல்

D பாண்டிய வம்சத்தின் உதவியுடன் பொலன்னறுவையில் மூன்று முறை அதிகாரத்திற்கு வந்த அரசியாதல்

(III) புராதன இலங்கையில் கிராமங்கள் நிர்வகிக்கப்பட்ட விதத்தைஅவற்றின் தலைமைத்துவம் மற்றும் பணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

(IV) புராதன இலங்கையின் பொருளாதாரத்தில் தேசிய மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமை பற்றி மூன்று காரணிகளை முன்வைத்து விளக்குக.

08 (i) அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பெரிய குளங்கள் மூன்றினைப் பெயரிடுக.

(ii) பின்வரும் யுஇடீஇஊ மற்றும் னு எழுத்துக்களின் மூலம் தரப்பட்டுள்ளவை பண்டைய தொழினுட்பம் மற்றும் அதனுடள் தொடர்பான நிர்மாணிப்புக்கள் யாவை என்பதை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A – வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தமது வேலைகளைச் செய்வதற்குப் பயன்படுத்திய தொழினுட்பக் கருவிகளள் அழைக்கப்படும் பெயர்

B – மண்பானைகளைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தொழினட்ப உபகரணம்

C – நீர் இமுக்கத்தைச் சமநிலைப்படுத்தி வாய்க்காலுக்கு நீரை விடுவிக்கப் பயன்படுத்திய தொழினுட்ப நிர்மாணிப்பு

D – நீர்நிலையியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணிப்பு

(அலைதாங்கி, மடைக்கதவு, வில்லும் அம்பும், வனைதற்சில்லு, கல்லாயுதங்கள், தெடிகம யானை விளக்கு, வான்கதவு, கற்பீலிகள்)

(III) பண்டைய ஆட்சியாளர்கள் பாரியளவு குளங்களைக் கட்டும்போது எதிர்பார்த்த நோக்கங்கள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக?

(IV) (a) பண்டைய இலங்கையில் வளர்ச்சியடைந்த இரும்பு பிரித்தெடுக்கும் தொழினுட்பம் காணப்பட்டதாக தொல்பொருளயில் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ள இரண்டு இடங்களைக் குறிப்பிடுக.

(b) இவ்விடத்தில் இரும்ப பிரித்தெடுக்கப்பட்ட விதத்தைச் சுருக்கமாக விபரிக்குக?

09 (I) இலங்கையின் முதலாவது நகரமயமாக்கல் கட்டத்திற்குரிய பண்டைய நிர்வாக நகரங்கள் மூன்றைப் பெயரிடுக.

(II) முதலாவது நகரமயமாக்கல் கட்டத்திற்குரிய பண்டைய நகர நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்னைனக் குறிப்பிடுக.

(III) தம்பதெனியா இராசதானியை ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தின் முக்கியத்துவத்தை இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

(iv) இரண்டாவது நகரமயமாக்கல் கட்டத்தின் போது இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பிலேற்பட்ட மாற்றங்கள் மூன்றை உதாரணங்களுனட் விளக்குக.

10 (i) மலைநாட்டு இராசதானியின் தலைநகரமாக விளங்கிய கண்டியின் பாதுகாப்புடன் தொடர்புடைய முக்கியமான

(a) ஆறு
(b) கணவாய்கள் இரண்டு

(II) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய நபர்கள் யாவர் என்பதை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A – சீதாவாக்கை இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்த போர் அங்கிருந்த ஆட்சியாளன்

B – புதிய அரச சம்சத்தை தொடங்கிய கண்டி இராச்சிய ஆட்சியாளன்

C – கி.பி.1302இல் கண்டிக்கு வருகை தந்த ஒல்லாந்து தூதுக்குழவின் தலைவர்

D – கி.பி 1766இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்ட கண்டி இராச்சிய ஆட்சியாளன்

(III) கண்டி இராசதானியின் பிராந்திய நிர்வாகம் ஒழுங்கமைந்திருந்த விதத்தை இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(IV) கண்டி இராசதானியின் சமூக அமைப்பில் பிரதானமாகப் புலப்படும் பண்புகளை மூன்று உதாரணங்களைக் குறிப்பிட்டு விவரிக்குக.

## 2018

11 (I) A இலங்கையில் முதன் மதலில் குடியேறிய மனிதன் என்ன பெயரால் இனங்காணப்படுகின்றான்?

B அவர்கள் இலங்கையில் பரம்பி வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(II) முன்வரலாற்றுக்காலம் மாற்றங்களுக்கான சகாப்தமாகக் கருதப்படுவதற்கு ஏதுவான இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

(III) ஆரம்ப வரலாற்றுக் காலத்தின் குடியிருப்புக்களது இயல்பினை இரண்டு காரணிகளினூடாக விபரிக்குக.

(IV) வரலாற்று யுகத்தில் நடைமுறையிலிருந்த பொரளாதார அமைப்பில் விவசாயம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை உதாரணங்களுடன் விளக்குக;

12 (I) A – அனுராதபுரம் B – பொலன்னறுவை C – மாகம

ஆகிய புராதன நிர்வாக மையங்கள் எந்த ஆற்றுப்பள்ளத்தாக்குகளை அண்மிதது அமைந்திருந்தன என்பதை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து தொடரொழுங்கில் எழுதுக.

(கலாஓயா, கிரிந்திஓயா, மகாவலிகங்கை, வளவைகங்கை, மல்வத்துஓயா, கல்லோயா)

(II) A அனுராதபுர நகரத்திற்கு நீரை வழங்குவதற்கு நிர்மாணிக்கப்பட்டதாக கருதப்படகின்ற இரண்டு வாவிகளைப் பெயரிடுக.

B பிக்குகளின் பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு தடாகங்களைப் பெயரிடுக.

(III) வரலாற்றுக் காலத்தில் பாரிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதற்கான தேவைகள் ஏற்பட்டதற்கான காரணத்தை இரண்டு காரணிகளூடாக தெளிவுபடுத்துக.

(IV) A குளக்கட்டு B கலிங்கல் C கலிங்கற்றொட்டி D சுருங்கை

குளம் ஒன்றில் காணப்படும் மேற்குறிப்பிட்டுள்ள தொழினுட்ப கூறுகளுள் ஏதேனும் இரண்டின் அமைப்பு செயற்பாடு ஆகியன தொடர்பாக விபரிக்குக.

13 (I) A இராஜரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியின் பின்னர் இலங்கையின் வடபகுதியில் தோன்றிய இராச்சியத்தின் பெயர்

B இந்த இராச்சியத்தில் ஆட்சி புரிந்த வம்சத்தின் பெயர்

C வரண்ட வலயத்தின் பல்வேறு பகுதிகளில் தோன்றிய சிறிய நிர்வாக அலகுகுள் அழைக்கப்பட்ட பெயர்

ஆகியவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(II) A இரண்டாவது நகரமயமாக்கக் காலப்பகுதியில் உயர் மலைக்குன்றுகளுக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு நிர்வாக மையங்கள்

B மலைத்தொடர்கள், ஆறுகளை அண்மித்து அமைக்கப்பட்ட இரண்டு நிர்வாக மையங்கள் ஆகியவற்றைப் பெயரிடுக.

(III) இரண்டாவது நகரமயமாக்கக் காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற வர்த்தகத்தின் இயல்புகளை இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

(IV) கோட்டை இராச்சியத்தின் ஆறாம் பராக்கிரமபாகு மன்னன்

A நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு செயற்பட்ட விதம் பற்றியும்

B அவரது ஆட்சிக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட கல்வி, இலக்கிய வளர்ச்சி பற்றியும் சுருக்கமாக விபரிக்குக.

14 (I) கண்டி இராச்சியத்துக்குரியதாகக் காணப்பட்ட நிர்வாகப் பிரதேசங்கள் மூன்றினைப் பெயரிடுக.

(II) கண்டி இராச்சிய காலப்பகுதியில் பின்வரும் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்களின் உத்தியோகபூர்வ பெயர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து தொடர் ஒழுங்கில் எழுதுக.

A மன்னனின் யானைகளுக்குப் பொறுப்பானவர்

B அரச மாளிகைக்கு உணவு குடிபானங்களை வழங்குபவர்

C மன்னனுக்கு வேண்டிய ஆடையணிகளுக்குப் பொறுப்பானவர்

D மிகச்சிறிய நிர்வாக அலகான கிராமத்துக்குப் பொறுப்பானவர்

(விதானை, கோறளை, சலுவடனநிலமே, கஜநாயக்க நிலமே, பத்வடன சிலமே, கொடித்துவக்கு நிலமே, தியவதன நிலமே)

(III) கண்டிய (மலைநாட்டு) சமூகத்தில் காணப்பட்ட திருமண முறைகள் பற்றி விபரிக்குக.

(IV) கண்டி இராச்சிய காலப்பகுதியில்

A விவசாயம் B கைத்தொழில்

ஆகியன ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையினை எடுத்துக்காட்டுக.

**2019**

15 (I) கல்வெட்டுக்கள் அமைக்கப்பட்ட இயல்புக்கமைய அவற்றை வகைப்படுத்தக்கூடிய முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(II) பின்வரும் யு தொடக்கம் கு வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A இலங்கைப்படத்தை வரைந்த முதல் கிரேக்க இனத்தவர்

B அனராதபுர ஆரம்ப காலத்தில் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களுக்கு வழங்கப்பட்ட பெயர்

C தொல்பொருள் அகழ்வினால் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பழைய நாணயங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்

D வசப மன்னனின் காலத்தில் ரிஷிகிரி அமைச்சரினால் நகதிவ ஆட்சி செய்யப்பட்டதைக் குறிப்பிடும் மூலாதாரம்

(III) வரைலாற்றைக் கட்டியெழுப்புவதில் கல்வெட்டுக்கள் முக்கியத்துவம் பெறும் விதத்தை இரண்டு விடயங்கள் கொண்டு விளக்குக;

(IV) வரலாற்றைக் கற்பதனால் பெறக்கூடிய நன்மைகள் மூன்றினை விவரிக்குக.

16 (I) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் உபகரணங்களை செய்வதற்குப் பயன்படுத்திய மூன்று வகையான கற்களைக் குறிப்பிடுக.

(II) A வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்கள் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகள் இரண்டினையும்

B அவர்கள் வேட்டையாடிய விலங்குகள் இரண்டினையும் ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(III) முன் வரலாற்றுக் காலத்தில் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை விபரிக்குக.

(IV) ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் பரம்பல் கோல வளர்ச்சியின் இயல்புகள் மூன்றினை விபரிக்குக.

17 (I) A சிறு தூபிகளை உள்ளடக்குவதற்காக அமைக்கப்பட்ட கட்டடம்

B குளத்தில் ஏற்படும் நீர் அலைகளால் குளக்கட்டு அரிக்கப்படுவதைத் தடுப்பதற்கு உருவாக்கப்பட்ட அமைப்பு

C மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாப்புப்பெற பாரிய தூபிகளின் உச்சியில் பொருத்தப்பட்ட கருவி

என்பவற்றை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

(II) A மகாவலி கங்கையுடன் தொடர்புடைய புராதன கால்வாய்கள் இரண்டினையும்

B கலாஓயா் முற்றும் மல்வத்துஓயா என்பவற்றை மறித்துக் குறுக்காகக் கட்டப்பட்ட பாரிய குளம் ஒவ்வொன்றையும் குறிப்பிடுக.

(III) பூங்கா அலங்காரம், பாதுகாப்பு போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்ட புராதன நகர நிர்மாணத் தொழினட்பம் நிலவியதை சிகிரியாவை அடிப்படையாகக் கொண்டு எடுத்துக் காட்டுக.

(IV) புராதன காலத்தில் இந்நாட்டில் முன்னேற்றமடைந்த வைத்திய சேவை நிலவியதை மூன்று விடயங்களை எடுத்துக்காட்டி விபரிக்குக.

18 (I) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது காணப்பட்ட மூன்று இராசதானிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(II) பின்வரும் யு தொடக்கம் னு வரையிலான கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A கி.பி 1505இல் காலியை வந்தடைந்த முதலாவது போர்த்துக்கேய மாலுமி

B கி.பி 1602இல் முதலாம் விமலதர்மசூரிய மன்னனைச் சந்திக்க வந்த ஒல்லாந்து தூதுவன்

C கி.பி 1638இல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கை செய்துகொண்ட கண்டி மன்னன்

D கி.பி 1762இல் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனைச் சந்திப்பதற்கு வந்த ஆங்கிலேயத் தூதுவன்

(ஜோன்பைபஸ், றொபட்அன்றூஸ், லோரன் சோடி அல்டோ, பிரான்சிஸ்குத அல்மேதாஈ இரண்டாம் இராஜசிங்கன், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன், ஜோரஜஸ்வான் ஸ்பில் பேர்ஜன், சீபோல்தவாட்)

(III) போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான காரணங்களை இரண்டு விடயங்களினூடாக விளக்குக?

**தரம் 11**

**2016**

01 (i) பிரித்தானியர்களால் இந்தியாவில் அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் மூன்றினைப் பெயரிடுக.

(II) இலங்கை மீது பிரித்தானியர்களின் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாய் அமைந்த காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(III) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பிரித்தானியருக்கு ஏன் அலையத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவையேற்பட்டது என்பதனை இரண்டு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விவரிக்குக.

(IV) கி.பி 1818இல் பிரிதட்தானியருக்கு எதிரான கலகம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைச் சுருக்கமாக விளக்குக.

**2017**

02 (I) பின்வரும் அரசியல் ஒவ்வொன்றும் எந்த அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் கீழ் இடம்பெற்றதென்பதை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து யுஇடீ மற்றும் ஓ ஒழுங்குமுறையில் குறிப்பிடுக

A சட்டத்துறைக்கு முதன் முதலில் வரையறுக்கப்பட்ட வாக்குரிமையடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல்.

B உறுப்பினர்கள் 61 பெரைக் கொண்ட அரசுக்கழகத்தை தாபித்தல்

C உறுப்பினர்கள் 30 பேரடங்கிய செனட்சபை (மூதவை தாபிக்கப்படல்)

(கி.பி 1833 கோல்புறுக், கி.பி 1910 குறுமக்கலம், கி.பி 1931 டொனமூர், கி.பி 1947 சோல்பரி)

(II) 1833 கோல்புறுக் சீர்திருத்தங்களின் மூலம் ஏற்பட்ட நிருவாக மாற்றங்கள் இரண்டையும் பொருளாதார மாற்றங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

(III) பிரித்தானியராட்சியினால் இந்நாட்டிலேற்பட்ட சமூக மாற்றங்கள் இரண்டைச் சுருக்கமாக விபரிக்குக.

(IV) சுதந்திரத்தின் பின்னரான இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவை இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்த விதத்தை இரண்டு காரணிகளை முன்வைத்து விளக்குக?

**2018**

03 (I) இந்து சமுத்திரததைச் சுழவுள்ள நாடுகளுடன் வர்த்தகப் போட்டியில் ஈடுபட்ட (பிரிததானியா தவிர்ந்த ) ஐரோப்பிய நாடுகள் மூன்றினைப் பெயரிடுக.

(II) திருகோணமலைத் துறைமுகம் பிரித்தானியருக்கு முக்கியத்துவமானதாய் அமைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

(III) கி.பி 1815இல் பிரித்தானியருக்கு அதிக முயற்சியின்றி கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றக்கூடியதாய் இருந்தமைக்கான காரணத்தை இரண்டு காரணிகளுனூடாக எடுத்துக்காட்டுக.

(IV) கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டு மூன்று வருடங்களின் பின்னர் ஆரம்பித்த தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

04 (I) இலங்கையில்

A விவசாயம் மற்றும் காணி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தலைவர்களுக்குக் சந்தர்ப்பம் கிடைத்த முதலாவது அரசியல் யாப்பு

B விவசாயக் குடியேற்றத்திட்டத்தின் தந்தை எனக் கருதப்படுகின்ற மக்கள் தலைவர்

C ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பலநோக்குத் திட்டம்

ஆகியவற்றை ஒழுங்குமுறையில் பெயரிடுக.

(III) விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக அமைவது இலங்கையின் உலர் வலயங்களே என்பதை இரண்டு காரணிகளின் மூலம் எடுத்துக்காட்டுக.

(IV) இலங்கையின் ஏனைய நதிகளை விட மகாவலிகங்கை பலநோக்கு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விசேடமானதாகும் என்பதனை மூன்று காரணிகளினூடாக விளக்குக.

**2019**

(IV) கி.பி 1818இல் கண்டியில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்ட இயக்கம் பற்றி பின்வரும் தலைப்புக்களில் சுருக்கமாக விபரிக்குக.

A அதற்குச் செல்வாக்குச் செலுத்திய பின்னணி

B தலைமைத்துவம்

C போராட்ட இயக்கம் தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள்

05 (i) பிரித்தானியரால் இந்நாட்டின் மலைப்பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டப்பயிர்கள் மூன்றினைப் பெயரிடுக.

(II) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பெருமளவில் பரவிய மலையக மாவட்டங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(III) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமைக்குக் காரணமான கோல்புறுக்கின் ஆலோசனைகள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக.

(IV) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காரணமாக இந்நாட்டில் ஏற்பட்ட பொரளாதார மற்றும் சமூக மாற்றங்கள் ஒவ்வொன்றினை எடுத்துக்காட்டி அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

06 (i) A சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி

B கி.பி 1972 இலங்கைக் குடியரசின் பிரதம மந்திரி

C கி.பி 1978 இலங்கைக் குடியரசின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி

(II) கி.பி 1978 அரசியல் யாப்புக்கேற்ப அறிமுகஞ்செய்யப்பட்ட புதிய வாக்களிப்பு முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(III) சுதந்திரத்தின் பின்னரான முப்பதாண்டு காலங்களில் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்களினால் இந்நாட்டின் வர்த்தக விவசாயத்தின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட இரண்டு செயற்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(IV) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் கைத்தொழில்துறை முன்னேற்றத்துக்காக மேற்கொண்ட செயற்பாடுகள் மூன்றினை விபரிக்குக.

# பகுதி III(உலக வரலாறு)

## தரம் 10

## 2018

01 (I) மறுமலர்ச்சியினால் பிரசித்தமான நகரங்கள் மூன்றினைப் பெயரிடுக?

(II) பின்வருவனவற்றோடு தொடர்புடையவர்களை ஒழுங்குமுறையில் பெயரிடுக.

A – புவி கோளவடிவானது என்பதனைக் கண்டுபிடித்தல்

B – தொலைநோக்கியைக் கண்டுபிடித்தல்

C – புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்தல்

D – அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தல்

(III) A மானிடவாதம் என்பதனால் கருதப்படுவது யாது?

B மறுமலர்ச்சிக் காலத்தில் பிரபல்யமான சித்திரப் படைப்புக்கள் மூன்றினைப் பெயரிடுக.

(IV) நாடுகாண் பயணத்தின் விளைவுகள் மூன்றினை விபரிக்குக?

## தரம் 11

## 2016

02 (i) பிரெஞ்சுப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய கருத்துக்களை முன்வைத்த தத்துவஞானிகள் மூவரைப் பெயரிடுக.

(II) மேல்வரும் A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு தகவல்களுக்குமுரிய விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

A – அமெரிக்கப் புரட்சி ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்த சம்பவம்

B – சுதந்திர ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி

C – பிரெஞ்சுப் புரட்சியின் போது அந்நாட்டின் ஆட்சியாளர்

D – ரஸ்யப் புரட்சிக்குத் தலைமை தாங்கியவர்

(வீ.ஐ.லெனின், பதினாறாம் லூயி, நெப்போலியபொனபாட், பொஜ்டன் தேநீர் விருந்து, டென்னிஸ் மைதான உறுதிமொழி, ஜோர்ஜ் வோஸிங்டன், ஆபிரகாம் லிங்கன், ட்றொட்ஸ்கி)

(III) பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் அந்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக?

(IV) ரஸ்யப்புரட்சியினால் அந்நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் ஒவ்வொன்றை உதாரணம் தந்து விளக்குக?

03 (i) குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகள் மூன்றினைப் பெயரிடுக.

(II) மேல்வரும் A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு தகவல்களுக்குமுரிய விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறையில் எழுதுக.

A – சிறு இராச்சியங்கள் பலவற்றை ஒன்றிணைத்து ஜேர்மனி என்ற பெயரில் ஒரு நாட்டை உருவாக்கியவர்.

B – காலனித்துவ ஆட்சியை ஏற்படுத்தும் கொள்கையைக் கடைப்பிடித்த ஜேர்மனியப் பேரரசர்.

C – இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது நட்பு நாடுகள் அணிக்குத் தலைமை தாங்கிய பிரித்தானியப் பிரதமர்

D – இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதியில் எதுவித நிபந்தனைகளும் இன்றி அடிபணியும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ஜப்பானியப் பேரரசார்

(ஹிதோஹித்தோ, முட்சுஹிதோ, வின்ஸ்ரன் சேர்ச்சில், லொயிட் ஜோர்ஜ், இரண்டாம் வில்லியம், ஓட்டோவொன் பிஸ்மார்க்க், அடோல் ஹிட்லர், ஜோசப் ஸ்டாலின்))

(III) உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை பின்பற்றக்கூடிய நடவடிக்கைகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக?

(IV) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் மூன்று விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக.

## 2017

04 (I) பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சியானது மூன்று பிரதான கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பித்தது. அக்கைத்தொழில்களைப் பெயரிடுக.

(II) கைத்தொழிற்புரட்சியின் போது (A) தொடர்பாடல் மற்றும் (B) போக்குவரத்து துறைகளிலேற்பட்ட புதிய உற்பத்திகள் இரண்டு வீதம் ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

(III) கைத்தொழிற்புரட்சியின் விளைவாக உலக சமூகத்திலேற்பட்ட மாற்றங்கள் இரண்டை விபரிக்குக.

(IV) கைத்தொழிற்புரட்சி இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதத்தை மூன்று உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

05 (I) முதலாம் உலக மகா யுத்தத்தின் போது காணப்பட்ட நேச(நட்பு) அணிக்குரிய நாடுகள் மூன்றைப் பெயரிடுக.

(II) பின்வரும் தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி தருக.

A முதலாம் உலக மகா யுத்தத்தின் போது அமெரிக்காவிலிருந்த ஜனாதிபதி

B இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானிய தாக்குதலுக்குட்பட்ட அமெரிக்கத் துறைமுகம்

C இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜேர்மன் வதை முகாம்களில் கொல்லப்பட்ட இனம்

D அடோல்ப் ஹிட்லரின் இரகசிய பொலிசாரைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட பெயர்

(III) இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு ஏதுவாயமைந்த காரணிகள் இரண்டைச் சுருக்கமாக விபரிக்குக?

(IV) இரண்டாம்உலக மகா யுத்தத்தினால் பேரழிவுகள் ஊற்பட்டமையை மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக?

**2018**

06 (I) அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவிய ஐரோப்பிய இனத்தவர் மூவரைப் பெயரிடுக.

(II) அமெரிக்க சுதந்திரப்போருக்கு வழிவகுத்த காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

(III) பிரான்சியப் புரட்சியில் செல்வாக்குச் செலுத்திய பொருளாதாரக் காரணகிள் இரண்டினை விபரிக்குக.

(IV) ரஸ்யப் புரட்சியின் விளைவுகளால் உலக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை உதாரணங்களுடன் விளக்குக?

**2019**

07 (I) பதினெட்டாம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளை தாபிப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகள் (பிரித்தானியா தவிர) மூன்றினைக் குறிப்பிடுக.

(II) கைத்தொழில் புரட்சிக் காலத்தில் ஏற்பட்ட புதிய உற்பத்திகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுடன் தொடர்புடைய நபர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A பறக்கும் நூனரிழி B பாதுகாப்பு விளக்கு

C புகைக்கப்பல் D தந்திமுறை

(ஜோன்கே, குக்லி மார்க்கோனி, சாமுவேல் மோஸ், ஹென்றிபெல், றொபட்புல்டன், தோமஸ் நியுகொமன், ஹம்பிறிடேவி, சாமுவேல் குறோம்டன்)

(III) கைத்தொழில் புரட்சி காலத்தில் பிரித்தானியாவில் இரும்பு, உருக்குக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றங்களை இரண்டு உதாரணங்களைக் குறிப்பிட்டு விபரிக்குக.

(IV) கைத்தொழில் புரட்சியின் செல்வாக்குக் காரணமாக விவசாயத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினை மூன்று உதாரணங்களைக் குறிப்பிட்டு விபரிக்குக.

08 (I) A முதலாம் உலக மகா யுத்தத்துடன் தொடர்பான நாடுகள் உருவாக்கிய இரண்டு முகாம்களையும்

B சரஜிவோ நிகழ்வினால் கொல்லப்பட்ட ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசனின் பெயரையும் யுஇடீ என ஒழுங்குமுறைப்படி எழுதுக.

(II) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை அடைப்புக்குளிக்குள் இருந்து தெரிவுசெய்து ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A ரஸ்யாவை ஆக்கிரமிக்கச்சென்று தொல்வியடைந்த பிரான்சின் சக்கரவர்த்தி

B கி.பி 1934இல் மஞ்சூரியாவை ஆக்கிரமிப்புச் செய்த நாடு

C நாசிகளுக்கு எதிரான போரில் பிரித்தானிய மக்களைத் தூண்டிய அந்நாட்டின் பிரதம மந்திரி

D இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் ஐக்கிய அமெரிக்க அரசின் ஜனாதிபதி

(சார்ள்ஸ் டிகோல், நெப்போலியன் பொனபட், வூட்றோவில்சன், லொயிட் ஜோர்ஜ், பிராங்ளின் ரூஸ்வெல்ட், ஜேர்மனி, ஜப்பான், வின்சன் சேர்ச்சில்)

(III) முதலாம், இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க அரசுகள் இணைந்து கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு சம்பவங்களைச் சுருக்கமாக விளக்குக?

(IV) சர்வதேச சங்கம் உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியாமல் போனதில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணங்களை விளக்குக?